# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு
*************

## ஊடக அறிக்கை

### ஆறாவது ஆயுள்வேத தின நிகழ்வுகள்

ஆறாவது ஆயுள்வேத தினத்தினை முன்னிட்டு கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசார பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையமானது "போஷணைக்கான ஆயுள்வேதம்" என்ற தொனிப்பொருளில் 2021 நவம்பர் இரண்டாம் திகதி கலப்பு முறையிலான செயலமர்வு ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தது. இந்த செயலமர்வில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலானோர் கலாசார நிலையத்தில் நேரடியாக பங்குபற்றியிருந்த அதேவேளை, இந்தியா இலங்கை மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளைச்சேர்ந்த பலர் மெய்நிகர் மார்க்கங்கள் ஊடாக பங்குகொண்டிருந்தனர். சிறந்த ஆரோக்கியம் மற்றும் சிறந்த வாழ்க்கைக்காக, ஆயுள்வேதம் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் மற்றும் ஆயுள்வேதம் குறித்து அண்மையில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஆய்வுகளின் முடிவுகளை பரிமாறிக்கொள்ளுதல் ஆகியவை இந்த செயலமர்வின் முக்கிய நோக்கங்களாக அமைந்திருந்தன.

2. 2016 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் தன்வந்திரி ஜெயந்தி தினத்தன்று ஆயுள்வேத தினத்தினை இந்திய அரசாங்கம் கொண்டாடி வருகின்றது. ஆயுள்வேதத்தின் பயன்பாடுகளை மேம்படுத்துவதற்கும் அவற்றினை பரவலடையச்செய்வதற்காகவும் இந்த தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சை குறித்த புராதன சமஸ்கிருத நூலான சுஸ்ருதா சம்ஹிதாவில் ஆயுள்வேதத்தின் இறைவனாக கூறப்பட்டிருக்கும் தன்வந்திரி பெருமானின் பிறந்த தினத்தையும் இந்த தினம் நினைவு கூருகின்றது. இதேவேளை தீபத் திருநாளான தீபாவளிக்கு முன்னதான முதல் ஐந்து நாட்களில் முதலாவது நாளாகவும் குறித்ததினம் அமைகின்றது.

3. இந்த செயலமர்வில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ ஸ்ரீ கோபால் பாக்லே அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொண்டிருந்தார். தீபாவளி மற்றும் தந்தேரஸ் வாழ்த்துக்களை பகிர்ந்துகொண்டிருந்த உயர் ஸ்தானிகர், ஆரோக்கியத்தினை மேம்படுத்துவதற்கும் நோய்களை தடுப்பதற்கும் மருத்துவத்தின் ஒரு முழுமையான பொறிமுறையாக ஆயுள்வேதத்தின் முக்கியத்துவம் தொடர்பாகவும் இங்கு சுட்டிக்காட்டியிருந்தார். அதுமட்டுமல்லாமல் சூழலிலும் உடலிலும் அமைதியைப் பேணுவதற்கு இயற்கையான ஒரு பொறிமுறையாக ஆயுள்வேதம் இருப்பதாக அவர் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் ஆயுள்வேதத்தினை மேம்படுத்துவதற்கும் அதனை பரப்புவதற்கும் பௌத்தமதம் வழங்கிய பங்களிப்புக்களையும் குறிப்பிட்டிருந்த உயர் ஸ்தானிகர், உலகளவில் பிரபலமான இந்திய பல்கலைக்கழகங்களான நாலந்தா, தக்ஷிலா மற்றும் விக்ரம்ஷிலா போன்ற பல்கலைக்கழகங்களும், பிரபலமான வைத்திய நிபுணர்களாகவும் பௌத்த புலமையாளர்களாகவும் திகழ்ந்த வக்பதா மற்றும் நாகர்ஜுனா போன்றவர்களும் ஆயுள்வேதத்தை மேம்படுத்துவதற்கும் அதனை பரப்புவதற்காகவும் வழங்கியிருந்த முக்கியமான வகிபாகங்கள் தொடர்பாகவும் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டிருந்தார்.

4. கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ துறையின் பணிப்பாளரான சிரேஷ்ட பேராசிரியர் ப்ரியாணி பரணகம அவர்கள் இந்நிகழ்வுகளில் கௌரவ விருந்தினராக கலந்துகொண்டிருந்தார். இங்கு உரை நிகழ்த்திய அவர், ஒரு மருத்துவ முறைமையாக ஆயுள்வேதத்தின் நூற்றாண்டுகள் பழமையான பாரம்பரியம் மற்றும் முக்கியத்துவம் தொடர்பில் சுட்டிக்காட்டியிருந்ததுடன் மேலைத்தேய மருத்துவ முறைமையானது ஆயுள்வேதத்தின் அடிப்படை அம்சங்களை பின்பற்ற ஆரம்பித்திருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். ஆயுள்வேத திணைக்களத்தின் ஆணையாளரான டாக்டர் தம்மிக்க அபயகுணவர்த்தன அவர்களும் இந்த செயலமர்வில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

5. அதேபோல, ஏனைய உரையாளர்களாக இலங்கையைச் சேர்ந்த பெருமதிப்புக்குரியவர்களான இலங்கை மருத்துவ தாவரங்களின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரமான பயன்பாட்டுத்திட்டத்தின் முன்னாள் பணிப்பாளரும் ஆயுள்வேத மருத்துவ சபையின் முன்னாள் பதிவாளரும் ஆயுள்வேத மருத்துவருமான டாக்டர் டனிஸ்டர் எல் பெரேரா, கொழும்பு தேசிய ஆயுள்வேத போதனா வைத்தியசாலையின் மருத்துவ நிபுணரும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ துறையின் ஆயுள்வேத மருந்தியல் மற்றும் மருந்தறிவியல் திணைக்களத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான டாக்டர் பத்திரகே கமல் பெரேரா, மற்றும் குழந்தைகள் மருத்துவம் மற்றும் மருத்துவ ஒவ்வாமை நிபுணர் டாக்டர் அஜித் அமரசிங்க ஆகியோர் இந்த செயலமர்வில் கலந்துகொண்டிருந்தனர்.

6. இதேவேளை இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தி, பெங்களூரில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த மருத்துவ மையமான ஆரோக்யாதத்தின் பிரதான மருத்துவ அதிகாரி டாக்டர் அமித் சிங்; கர்நாடகாவில் உள்ள எஸ் டி எம் ஆயுள்வேத கல்லூரி மற்றும் மருத்துவமனையின் ரஷசாஸ்திர மற்றும் பைசஜ்ஜ கல்பனா திணைக்கள பேராசிரியர் டாக்டர் கோவிந்த சர்மா; எஸ் டி எம் ஆயுள்வேத கல்லூரி மற்றும் மருத்துவமனையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித்துறை பீடாதிபதியும் மனசரோஹ திணைக்கள தலைவருமான பேராசிரியர் டாக்டர் சுஹாஸ் குமார் ஷெட்டி, ஒருங்கிணைந்த மருத்துவ நிலையங்களை அடிப்படையாகக் கொண்ட வலையமைப்பான விவேகானந்தா ஆரோக்கியா உலகளாவிய வலையமைப்பின் இணை ஸ்தாபகரும் மருத்துவ பணிப்பாளருமான டாக்டர் வசுதா சர்மா, மற்றும் ராஜீவ் காந்தி கல்விப்பேரவையினால் நிர்வகிக்கப்பட்டுவரும் கர்நாடகாவிலுள்ள ஆயுள்வேத மருத்துவ கல்லூரியின் ஆலோசகரும் இணை பேராசிரியருமான டாக்டர் எஸ்.ஷ்ரேயா ஆகியோர் இந்த நிகழ்வில் உரையாளர்களாக பங்கேற்றிருந்தனர்.

7. பிரபல மருத்துவ ஆய்வாளரும் யோகா ஆயுள்வேத ஒன்றியத்தின் பணிப்பாளரும் ஆயுள்வேத யோகா சிகிச்சை நிபுணரும் எழுத்தாளருமான டாக்டர் சத்யம் திரிபதி அவர்கள் சிங்கப்பூரிலிருந்து இச்செயலமர்வில் கலந்துகொண்டிருந்தார்.

8. உடலில் அசுத்தங்களை நீக்கி நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்துவதற்கும் வாழ்வில் அமைதியை தக்கவைத்துக்கொள்வதற்கும் ஆயுள்வேதத்தின் முக்கியத்துவம் குறித்து இப்புலமையாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். அதுமட்டுமல்லாமல் உணவு கட்டுப்பாடு, மூலிகைகள் ஏனைய வாசனைத்திரவியங்கள் ஆகியவை ஆயுள்வேதத்தில் கொண்டிருக்கும் வகிபாகம் குறித்தும் அவர்கள் இங்கு குறிப்பிட்டிருந்தனர். இலங்கை மற்றும் இந்தியாவைச் சேர்ந்த ஆயுள்வேதத்துறை சார்ந்த மாணவர்கள் உள்ளிட்ட கிட்டத்தட்ட 100பேர் இந்த செயலமர்வில் பங்குபற்றியிருந்தனர்.

9. இந்திய அரசாங்கத்தின் ஆயுள்வேதம், யோகா, இயற்கை மருத்துவம், யுனானி, சித்த, சோவா-ரிக்பா மற்றும் ஹோமியோபதி அமைச்சு (ஆயுஷ்) மற்றும் இலங்கையின் சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு ஆகியவை சுதேச மாற்று மருத்துவத்தினை மேம்படுத்துவதற்கும் அதுதொடர்பான கல்வி மற்றும் ஆராய்ச்சிக்காகவும் பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். கொரோனா வைரசுக்கு எதிராக போராடுவதற்கு உதவும் வகையில் சிறந்த ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக இருஅமைச்சுக்களும் கணிசமான வழிகாட்டல்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**********

கொழும்பு
06 நவம்பர் 2021